# தண்ணீர்

## முன்னுரை:

தண்ணீரின் தேவையைப் பண்டைய காலத்திலிருந்து இலக்கியங்கள் வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றன. இன்று நீர் நெருக்கடி உச்சத்தில் இருக்கிறது.

குறிப்பாகச் சிற்றூர்களில் இந்த நெருக்கடி வாழ்க்கைச் சிக்கலாகவே மாறி வருகிறது. இதை உணர்த்தும் வகையில் கந்தர்வன் அவர்கள் எழுதிய “தண்ணீர்” என்னும் சிறுகதையைக் கட்டுரை வடிவில் காண்போம்.

## இந்திராவின் வீடு:

வெயில் தணியத் தொடங்கிய வேலை பயணிகள் ரயிலின் அறைகூவல் வெகு தொலைவிலிருந்து கேட்டது. வல்லநேந்தல் தாண்டியதும் தொடர் வண்டி ஓட்டுநர்கள் எழுப்பிய ஒலி கேட்டுத் திண்ணைக்கு ஓடிவந்து, தூணைப் பிடித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் இந்திரா. உள்ளே அம்மா, 'பொட்டு தண்ணி இல்லை', என்று ரயில் ஊதல் கேட்டுச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

## தண்ணீர் எடுக்கச் சென்ற இந்திரா:

இந்திரா குடத்தை எடுத்துக்கொண்டு ஓடினாள். ஏழெட்டுப் பெண்கள் குடங்களுடன் ஓடிவந்து இந்திராவை தாண்டிப் போகப் பார்த்தார்கள். எல்லோரும் வாலிபப்பெண்கள் அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு காலி குடங்களுடன் வேகமாகச் சென்றார்கள். இந்திரா இதில் கெட்டிக்காரப் பெண் எல்லோருக்கும் முன்பாக இடம்பிடித்ததோடு மட்டுமல்லாமல் பதற்றமே இல்லாமல் அலட்சியமாக நின்றாள்.

ரயில் காட்டுயானை பிளிறிக் கொண்டு வருவது போல நிலையத்துக்குள் நுழைந்தது. பயணிகள் இறங்கும் முன்பாக இந்திரா குடத்தோடு பெட்டிக்குள் நுழைந்தாள். முகம்கழுவும் பேசின் குழாயை

அழுத்தி வேகவேகமாகக் தண்ணீரைப் பிடித்துக் குடத்தில் ஊற்றிக்கொண்டிருந்தாள். தண்ணீரைச் சிறிது சிறிதாகத் தான் அவளால் சேகரிக்க முடிந்தது.

காணாமல் போன இந்திரா:

முதல் நாள் ரயிலில் பிடித்துவரும் தண்ணீரைத்தான் அடுத்த நாள் மாலை வரை வீட்டிற்குக் குடிநீராக வைத்துக் கொள்ளவேண்டும். அதுவும் இல்லாமல் போனால் அருகிலுள்ள பிலாப்பட்டிக்குத் தான் செல்ல வேண்டும். ஊருக்குள் நான்கு இடங்களில் கிணறு வெட்டிப் பார்த்தார்கள்.

. ஐயா காலத்தில்' உலகம்மாள் கோவில் கிணறு மட்டும் நல்ல தண்ணீர்க் கிணறாக இருந்தது. ஏற்றம் வைத்து அதிகாலை முதல் தண்ணீரை இறைப்பார்கள் .இப்போது எல்லாமே பூண்டற்று போய்விட்டன. அம்மாதான் பிலாப்பட்டிக்குச் சென்று தண்ணீரை எடுத்து வருவாள். வயிற்றில் கட்டி வந்ததால் அம்மாவால் தண்ணீர் எடுக்கப் போக முடியவில்லை. அதனால் தண்ணீர் எடுக்க நிதமும் இந்திரா சென்றாள். மூன்று மணி தொடர்வண்டிக்கு 12 மணிக்கே பெண்கள் ரயில் நிலையத்தில் காத்திருப்பார்கள்.

காணாமல் போன இந்திரா:

தண்ணீர் பிடிக்கும் போது தொடர் வண்டி கிளம்பியது. வேகமாக தொடர் வண்டியில் இருந்து கீழே இறங்க நினைத்த இந்திராவைத் தொடர் வண்டியில் பயணித்த வடநாட்டுப் பெண் ஒருத்தி" இவள் தற்கொலை செய்யப் போகிறாள்"' என்று நினைத்து தடுத்து நிறுத்தினாள். இந்திரா வராதது கண்டு வீட்டில் அம்மா, ஐயா, ஊரார்கள் அனைவரும் வருத்தத்துடன் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆளுக்கு ஒரு யோசனையைச் சொன்னார்கள். அம்மா," என் மகள் தண்டவாளத்தில் தான் விழுந்து கிடக்கப் போகிறாள்" என்று அழுதுகொண்டே தண்டவாளத்தின் மேலேயே ஓட ஆரம்பித்தாள். பத்தடி ஓடியதும் ஐயா, அம்மாவைப் பிடித்து இழுத்து நிறுத்தி விட்டு கூர்ந்து பார்த்தார். தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது. அதை பார்த்த அம்மா கத்தினாள். "இந்திரா

வருது' என்றாள். இந்திரா தண்ணீர் குடத்தோடு கூட்டத்திற்கு அருகில் வந்தாள்.

முடிவுரை.

மகள் வந்து சேர்ந்ததில் அதிக பூரிப்பில் விம்மிக் கொண்டு போய்க் குடத்தை வாங்கினாள் இந்திராவின் தாய். நிறைகுடம் சொட்டுச் சிந்தாமல் கொண்டு வந்துவிட்டாள். அதைக் கண்டு ஐயா, “பயமகளே ...! இதையும் சுமந்துகிட்டா வரணும். இத்தனை மையிலுக்கும்”? என்றார். நாளைக்கு வர குடிக்க எங்க போறது”? என்று சொன்னாள் இந்திரா.